# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 செப்டம்பர் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 10.09.2018–ந் தேதி மாலை 3.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் : 1**

அரசாணை நிலை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.IV) துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை நிலை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.IV) துறை நாள்.26.07.2018 ஆகிய அரசாணைகளின்படி, சொத்துவரியினை 01.04.2018 (2018–2019 முதல் அரையாண்டு) முதல் பொது சீராய்வு செய்து அமுல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படியும் சொத்துவரிக்கான பொது சீராய்வு 2018–ல் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் (ந.க.எண். 20555/2018/ஆர்1, நாள்.20.08.2018) கீழக்கரை நகராட்சியில் குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 50% ம், வணிக கட்டிடஙகளுக்கு 100% ம் உயர்வு செய்யும் வகையில் சொத்துவரிக்கான மண்டல மதிப்பீடு (Zonal Value) உயர்வு செய்திட இந்நகராட்சி அலுவலர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு அக்குழு (Committee) பரிந்துரை செய்துள்ளவாறு மண்டல மதிப்பீடு கீழ்க்கண்டவாறு உயர்வு செய்யப்பட்டு அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | மண்டலம் | தற்போதைய நிலை | திருத்தம் செய்யப்பட்டு உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | A | 0.80 | 1.20 |
| 2. | B | 0.60 | 0.90 |
| 3. | C | 0.40 | 0.60 |

**அலுவலகக்குறிப்பு:–**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) சொத்துவரி சீராய்வு 2018–ன்படி சொத்துவரிக்கான மண்டல மதிப்பீடு உயர்வு செய்யப்பட்டுள்ளதை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.422** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

இந்நகராட்சியில் தொழில்வரி மறு சீராய்வு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2503/2018/ஆர்1, நாள்.21.05.2018ன்படி கீழக்கரை நகர்மன்ற தீர்மானம் எண்.392, நாள்.15.06.2018ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தொழில்வரி மறு சீராய்வு செய்வது தொடர்பாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் செய்தி தொடர்பு அலுவலர் மூலம் தினசரி நாளிதழில் கடந்த 20.06.2018ன்படி செய்தி வெளியிடப்பட்டது. மேலும், பொதுமக்கள் மற்றும் தொழில் முனைவோரிடம் மறுப்புகள் மற்றும் ஆட்சேபனைகள் பெற 30 நாட்களுக்கு இவ்வலுவலகத்தில் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க குறிப்பிடப்பட்டிருந்தது.

புதிய தொழில்வரி சீராய்வு செய்வதற்கு 30 நாட்கள் கடந்தும் பொதுமக்கள் மற்றும் தொழில்முனைவோரிடம் எழுத்து பூர்வமாக ஆட்சேபனை மனுக்கள் ஏதும் வரப்படாததால் திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரி சீராய்வு கட்டணஙகளுக்கு மன்றம் இறுதி அஙகீகாரம் வழஙகலாம்.

**(கோப்பு எண் இ2/591/2018 )**

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.423</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

கீழக்கரை நகராட்சி பேருந்து நிலையத்தில் பொதுநலன் கருதி வரி விளம்பர அறிவிப்புகள், போலியோ சொட்டுமருந்து அறிவிப்பு, குடிநீர் திருட்டு தடுப்பு பற்றிய அறிவிப்புகள், பிளாஸ்டிக் ஒழிப்பு அறிவிப்புகள், பேருந்து நிலையத்தை அசுத்தப்படுத்தாமல் இருக்க விழிப்புணர்வு அறிவிப்புகள், மேலும் பேருந்து புறப்படும் நேரம் பற்றிய அறிவிப்பு, திருடர்கள் ஜாக்கிரதை எச்சரிக்கை விளம்பரஙகள், போக்குவரத்து காவல்துறையின் விதிமுறைகள், மாவட்ட ஆட்சியரின் பொது அறிவிப்புகள், குழந்தை தொழிலாளர் ஒழிப்பு வாசக அறிவிப்புகள் ஆகியவற்றை நவீன ஆடியோ அமைத்து காவல்துறை அனுமதிபெற்ற பிறகு தினமும் காலை மற்றும் மாலையும் ஒலிபரப்ப அனுமதி வேண்டி ஸ்ரீ சக்தி பவுண்டேசன் தொண்டு நிறுவனம் NGO மூலம் வரப்பெற்ற விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

இந்நகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டு நகராட்சிகள் சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு உரிய நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்காணும் நிறுவனம் ஒரு வருடத்திற்கு விளம்பர கட்டணம் ரூ.12,000/– வீதம் மூன்றாண்டுகளுக்கு ரூ.36,000/–ஐ நகராட்சி கருவலத்தில் செலுத்தவும் 01.10.2018 முதல் அனுமதி வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.424</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 1588/2015, நாள்.14.02.2016ன் படி, கீழக்கரை நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகள் மற்றும் பொதுமக்களுக்கு தொடர்ந்து 5 தவணைகளில் நிலவேம்பு கசாயம் வழஙக அறிவுறுத்தப்பட்டு, ஏற்கனவே 2 தவணைகளில் நிலவேம்பு கசாயம் வழஙகப்பட்டு, தற்போது 3வது தவணையாக நிலவேம்பு கசாயம் வழஙக நகராட்சிப் பகுதியில் உள்ள 21 வார்டுகளில் 19 பள்ளிகளில் பயிலும் மொத்த மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 10225 மற்றும் ஆசிரியர்கள் மற்றும் டெஙகு காய்ச்சல் பாதிப்பு உள்ள பகுதிகளில் நிலவேம்பு குடிநீர் வழஙக வேண்டி உள்ளது. எனவே நிர்வாக நலன் கருதி அரசு துறை நிறுவனமான TAMCOL சென்னை மூலம் நிலவேம்பு கசாயம் பவுடர் 600 கிலோ வாஙகுவதற்கு உத்தேச செலவினம் ரூ. 2,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண்.1126/2016/எச்1)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

நகரின் பொதுசுகாதார அவசியம் கருதி TAMCOL சென்னை நிறுவனம் மூலம் நிலவேம்பு கசாயம் பவுடர் பெறுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.425</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

அரசாணை நிலை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.IV) துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை நிலை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.IV) துறை நாள்.26.07.2018 ஆகிய அரசாணைகளின்படி, சொத்துவரியினை 01.04.2018 (2018–2019 முதல் அரையாண்டு) முதல் பொது சீராய்வு செய்து அமுல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படியும் சொத்துவரிக்கான, பொது சீராய்வு 2018–ல் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர்1, நாள்.23.07.2018–ல் அறிவுறுத்தப்பட்டு, இந்நகராட்சி வார்டு எண்.1 முதல் 21 வார்டுகள் வரையிலான சொத்துவரிகள் சீராய்வு செய்வதற்குரிய சுயமதிப்பீட்டு படிவஙகள், கூட்டுறவு சஙகஙகள் மூலம் விநியோகம் செய்ய இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி கீழ்க்கானும் நிறுவனத்திலிருந்து 10.09.2018–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின்பெயர் | படிவஙகளின் எண்ணம் | விலை ரூ |
|---|---|---|---|
| 1 | மெலகிராம் அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சஙகம், தென்காசி. | 100–க்கு | 226/– (Extra GST) |
| 2 | சிதம்பரனார் மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சஙகம், கோவில்பட்டி. | 100–க்கு | 225/– (Extra GST) |
| 3 | சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சஙகம், தூத்துக்குடி. | 100–க்கு | 224/– (Extra GST) |

மேற்காணும் கூட்டுறவு சஙகஙகளின் ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள, சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சஙகம், தூத்துக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் பார்வையிட்டு அனுமதி வழஙகலாம்.

**<u>கோப்பு எண். 825/2018/அ1</u>**

**<u>அலுவலக குறிப்பு.</u>**

குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.426</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 6</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெஙகு மற்றும் மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக தீவிர கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் கொசுப்புழு ஒழிப்பு மருந்தான பைரித்திரம் 100 லிட்டர் ( Pyrethirum 2%) மற்றும் கொசு புழுமருந்து (Larvicide) டெமிபாஸ் (அபேட்) மருந்து – 100 லிட்டர் வீதம் பொதுசுகாதார நலன் கருதி வாஙகி வழஙகிடுமாறும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 2,00,000/– ஆகும் எனவும் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. இந்நகர் மக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண் 992/2018/எச்1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. உத்தேச செலவீனம் ரூ 2,00,000/– ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. நிர்வாக நலன் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனஙகளிடமிருந்து விலைப்புள்ளி பெற்று கொசு ஒழிப்பு மருந்துகள் வாஙக மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.427** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 7**

எதிர்வரும் வட கிழக்கு பருவ மழைக்காக முன் எச்சரிக்கை நடவடிக்கை – கீழக்கரை நகராட்சியின் பொதுசுகாதார உபயோகத்திற்கு தேவையான தளவாடப்பொருட்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களின் சுகாதார நலனை கருதி பாதுகாப்பு உபகரணம் வாங்கி இருப்பில் வைத்துக்கொண்டு உரிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்கண்ட தளவாட பொருட்கள் வாங்கி வழஙகிடும் பொருட்டு உத்தேச செலவீனம் ரூ 3,00,000/– ஆகும் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது.

| வ.எண் | தேவையான தளவாடப்பொருட்கள் / பாதுகாப்பு உபகரணம் விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | மண்வெட்டி இரும்பு பிடியுடன் | 30 |
| 2 | சாக்கடை கரண்டி | 30 |
| 3 | புள்ளுவாரி (5 பல்லுடன்) | 30 |
| 4 | கடப்பாறை | 6 |
| 5 | கூட்டுமாறு (பெரியது) | 60 |
| 6 | சட்டி | 60 |
| 7 | பெருக்குமாறு | 100 |
| 8 | பிரஸ்கட்டை பிடியுடன் | 50 |
| 9 | கைத்தட்டு | 60 |
| 10 | சாந்து சட்டி | 20 |
| 11 | வாளி இரும்பு (சிறியது) | 10 |
| 12 | அரிவாள் | 15 |
| 13 | மழைக்கோட் | 50 |

மேற்காணும் பொதுசுகாதார உபயோகத்திற்கு தேவையான தளவாடப்பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணம் வாஙகுவதற்கான உத்தேச செலவீனம் ரூ 3,00,000/–யை இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொதுசுகாதார நலன் கருதி தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணம் வாஙகுவதற்கான உத்தேச செலவீனம் ரூ 3,00,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பொருட்கள் வாஙகிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.428** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 8</u>**

இந்நகராட்சி பொதுசுகாதார உழுவை மற்றும் இழுவை (Tractor & Trailor) வாகனம் **TN65D 1882** ஏற்பட்டுள்ள பழுதுகளை பாடிபிட்டிங , லிப்ட் பின்பக்க டோர் , என்ட்கப் ஸ்டேரிங பாக்ஸ் , வைப்பர் வயரிங செட் கெட்லைட்முன்புறம் கேபின் செட், செல்ப்மோட்டார், எலக்ட்ரிகல்ஸ், டிஙகரிங, பிளாட்பார்ம் புதிதாக மாற்றுதல், டிரைலர் பணிகள், பெயிண்டிங மற்றும் இதர பழுதுகள் சரிசெய்யும் பொருட்டு ஓட்டுநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் வாகனத்தை பழுது நீக்கம் செய்து இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று பெறும் பொருட்டு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொதுசுகாதார பணியின் அவசரம் கருதி உள்ளூர் நிறுவனஙகளில் விலைப்புள்ளி பெற்று மேற்காணும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. உத்தேச செலவீனம் ரூ.2,00,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினஙகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பொதுசுகாதார உழுவை மற்றும் இழுவை (Tractor & Trailor) வாகனம் **TN65D 1882** பழுதுநீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.429</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 9</u>**

கீழக்கரை நகராட்சி சொந்தமான உரஙகிடஙகு தில்லையேந்தல் பஞ்சாயத்து, பள்ளம் மோர்குளம் உரக்கிடஙகு 11.48 ஏக்கர் பரப்பளவு அமைந்துள்ளது. கீழக்கரை நகர் பகுதிகளில் தினமும் சேகாரமாகும் 17.5 மெட்ரிக் டன் குப்பை கூளஙகளை மேற்காணும் உரஙகிடஙகில் கொட்டப்பட்டு சேமித்து வைக்கப்படுகிறது. குப்பைகள் மலைபோல் குவிந்துள்ளதால் குப்பைகளை உரக்கிடஙகில் சேர்க்க வாகனஙகள் செல்ல வழி இல்லாமல் உள்ளது, மேலும் உரஙகிடஙகில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக பிரிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளும் பொருட்டு உரஙகிடஙகில் மலைபோல் கொட்டப்பட்டு குவிந்துள்ள குப்பை கூளஙகளை ஹிட்டாச்சி ஜெயின் டோசர் வாகனம் கொண்டு உரிய முறையில் சீரமைத்து தரும்படி 04.09.2018—ந் தேதி இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் கோரப்பட்டுள்ளது.

மேற்காணும், உரஙகிடஙகில் மலைபோல் கொட்டப்பட்டு குவிந்துள்ள குப்பை கூளஙகளை அப்புறப்படுத்துவதற்கு பொறியாளரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளதற்க்கிணஙக, பொறியாளரால் 05.09.2018—ந் தேதி உரக்கிடஙகு ஆய்வு செய்யப்பட்டு ஹிட்டாச்சி ஜெயின் டோசர் வாகனஙகளை பயன்படுத்தி பணிகளை செய்வதற்கு சுமார் 310 மணி நேரத்திற்கு உத்தேச செலவீனம் ரூ.6,50,000/— ஆகும் என்று நகராட்சி பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செலவீனம் இந்நகராட்சி வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.928/2018/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உத்தேச செலவீனம் ரூ.6,50,000/– மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.430</u>** அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர் மற்றும்**
**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**